ஸ்ரீஆண்டாள் அருளிய
திருப்பாவையில் இருப்பாயே

அடியேன் ஸார்வபௌமம்
அய்யம்பேட்டை ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன்

முன்னுரை

ஆண்டாள் அருளிய என்கிற திருப்பாவை என்னும் திவ்ய பிரபந்தம் அந்யாபதேஸம் என்னும் மேலோடு காணப்படும் கருத்துக்கள் மட்டுமின்றி ஸ்வாபதேஸம் என்னும் உயர்ந்த உள்ளர்த்தத்தோடு விளங்குவது. அதனால்தான் ஆசாரியர்கள் இதை வேதம் அனைத்துக்கும் வித்தாகும் என்றார்கள்.

அந்த ஸ்வாபதேசத்தில் முக்கியமாக ப்ரபத்தி முறையை ஆண்டாள் காட்டுகிறாள் என்பதே இந்த புத்தகத்தின் அடிப்படை கருத்து. முப்பதே பாசுரங்களை உடைய இந்த திருப்பாவையை ஸ்வாமி தேசிகன் சூசகமாக *தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே* என்றார். பத்து ஆழ்வார்களைப் பற்றி முதலில் *பொய்கை முனி பூதத்தார்* என்ற பாசுரத்தில் சொல்லி அந்த ஆழ்வார்களுடைய ஆழ்ந்த கருத்துக்கள் எல்லாம் இந்த கோதையின் திருப்பவையால் அறியலாம் என்ற அபிமானம்.

அடியேன் சிறிய ஞானத்தன் என்று ஆழ்வாரே சொல்லிக் கொள்ளும்போது கடுகிலும் சிறிதாய் இருக்கும் அடியேன் அறிவு தூசிக்கு சமமானது. இருந்தாலும் முடவன் கொம்புதேனுக்கு ஆசைப்படுவது போலே இந்த திருப்பாவைக்கு ப்ரபத்தி நெறியாக விளக்கம் எழுதலாம் என்று ஆசாரியர்களுடைய பாதங்களையே கதி என்று பற்றி ஆரம்பிக்கிறோம். ஆசார்யர்களுடைய திருவருளால் எம்பெருமான் இதை சிறப்பாக நடத்தித் தருவான் என்ற திடமான நம்பிக்கை.

இதில் உள்ள குற்றம் குறைகள் எல்லாம் அடியேனைச் சார்ந்தது. ஸத்விஷயங்கள் எல்லாம் ஆசாரியர்கள் கடாக்ஷத்தால் விளைந்தது என்று சொல்லி பாகவதர்களுடைய க்ருபா கடாக்ஷத்தை வேண்டி ஆரம்பிக்கிறோம்.

தனியன்கள்

நீளாதுங்க$_3$ ஸ்தநகி$_3$ரிதடீ ஸுப்தமுத்$_3$போத்$_4$ய க்ருஷ்ணம்
பாரார்த்$_2$யம் ஸ்வம் ஸ்ருதிஸஹஸ்ரஸ் ஸித்த$_3$மத்$_4$யாபயந்தீ |
ஸ்வோச்சி$_2$ஷ்டாயாம் ஸ்ரஜி நிக$_3$ளிதம் யா பலாத்க்ருத்ய பு$_4$ங்க்தே
கோ$_3$தா$_3$ தஸ்யை நம இத$_3$மித$_3$ம் பூ$_4$ய ஏவாஸ்து பூ$_4$ய: ||

அன்ன வயல் புதுவை ஆண்டாள் * அரங்கற்கு
பன்னு திருப்பாவைப் பல்பதியம் * - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை * பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக் கொடுத்த சுடர் கொடியே! * தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய்! * நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம் *
நாம் கடவா வண்ணமே நல்கு.

ஸ்வாமி தேசிகன் அருளிய பிரபந்த ஸாரம்

வேயர் புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம் *
மேன்மேலும் மிக விளங்க விஷ்ணுசித்தன் *
தூய திருமகளாய் வந்து அரங்கனார்க்கு *
துழாய் மாலை முடி சூடிக்கொடுத்த மாதே *
நேயமுடன் திருப்பாவை பாட்டு ஆறு ஐந்தும் *
நீ உரைத்த தை ஒரு திங்கள் பாமாலை *
ஆய புகழ் நூறுடன் நாற்பத்து மூன்றும் *
அன்புடனே அடியேனுக்கு அருள் செய் நீயே.

ஸ்ரீமாந் வேங்கட நாத ₂ார்ய: கவிதார்கிக கேஸரீ |
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா ஹ்ருதி₃ ||

ஸ்ரீவிஷ்ணுசித்த குல நந்தந கல்பவல்லீம்
ஸ்ரீரங்க₃ராஜ ஹரி சந்த₃ந யோக த்₃ருஶ்யாம் |
ஸாக்ஷாத் க்ஷமாம் கருணயா கமலாமிவாந்யாம்
கே₃த₃ாம் அநந்ய ஶரண: ஶரணம் ப்ரபத்₃யே ||

முதல் தனியன்

நீளாதுங்க$_3$ ஸ்தநகி$_3$ரிதடீ ஸுப்தமுத்$_3$போத்$_4$ய க்ருஷ்ணம்
பாரார்த்$_2$யம் ஸ்வம் ஶ்ருதி ஶதஶிரஸ் ஸித்த$_3$மத்$_4$யாபயந்தீ |
ஸ்வோச்சி$_2$ஷ்டாயாம் ஸ்ரஜி நிக$_3$ளிதம் யா பலாத்க்ருத்ய பு$_4$ங்க்தே
கோ$_3$தா$_3$ தஸ்யை நம இத$_3$மித$_3$ம் பூ$_4$ய ஏவாஸ்து பூ$_4$ய: ||

0-1 பராசர பட்டர் திருவரங்கத்தை பிரிந்து மனம் வருந்தி திருக்கோட்டியூரில் எழுந்திருக்கும் காலத்து அவர் சீஷ்யனான நஞ்சீயர் வேண்ட, ஆண்டாள் விஷயமாய் நீளாதுங்க$_3$ ஸ்தநகி$_3$ரிதடீ என்னும் இத் தனியனை அருளிச் செய்தார்.

0-2 நப்பின்னையின் மார்பக மலைச்சாரலிலே படுத்து கிடக்கும் கண்ணனை உறக்கத்திலிருந்து எழுப்பி வேதார்த்தங்களை நன்கு உணர்த்தி, தான் சூடிய மாலைகளை அவனுக்கு விலங்காய் இட்டு மகிழ்ந்த கோதைக்கு

0-3 சரணம் நாரய ஹ

தமிழ் தனியன்

*அன்ன வயல் புதுவை ஆண்டாள் * அரங்கற்கு*
*பன்னு திருப்பாவைப் பல்பதியம் * - இன்னிசையால்*
*பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை * பூமாலை*
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

*சூடிக் கொடுத்த சுடர் கொடியே! * தொல்பாவை*
*பாடி அருளவல்ல பல்வளையாய்! * நாடி நீ*
*வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம் **
நாம் கடவா வண்ணமே நல்கு.

ஸ்வாமி தேசிகன் அநுபவம்

வேயர் புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம் *
மேன்மேலும் மிக விளங்க விஷ்ணுசித்தன் *
தூய திருமகளாய் வந்து அரங்கனார்க்கு *
துழாய் மாலை முடி சூடிக்கொடுத்த மாதே *
நேயமுடன் திருப்பாவை பாட்டு ஆறு ஐந்தும் *
நீ உரைத்த தை ஒரு திங்கள் பாமாலை *
ஆய புகழ் நூறுடன் நாற்பத்து மூன்றும் *
அன்புடனே அடியேனுக்கு அருள் செய் நீயே.